பக்கங்கள் 21

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 21 ஞாயிற்றுக்கிழமை 04.02.2024 அதிர்வு 188





# போர்க்களமானது கிளிநொச்சி!

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் காட்டுமிராண்டித்தனம்

## சிறீதரன் எம்.பி. மீதும் தாக்குதல்; பல்கலை மாணவர்கள் கைது





(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தைக் கரி நாளாகப் பிரகடனப் படுத்தி கிளிநொச்சியில் இன்று தமிழர் தரப்பு மேற் கொண்ட எதிர்ப்புப் பேரணியின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை, தடியடி நடத்தியதால் பெரும் களேபரம் ஏற்பட்டது.



# போர்க்களமானது கிளிநொச்சி!






















# மட்டக்களப்பில் கறுப்பு சுதந்தர தினப் போராட்டம்

மட்டக்களப்பில் இராணுவத்தினரினதும் பொலிஸாரினதும் கெடுபிடிகளுக்கு மத்தியில் கறுப்பு சுதந்தர தினப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டபோது...





















# இந்திய மீனவர்கள் 23 பேர் கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் இரண்டு படகுகளில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 23 இந்திய மீனவர்கள் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் மயிலிட்டி மீன்பிடித் துறை முகத்துக்கு அழைத்து வரப்பட்டு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் கைளிக்கப்பட்டனர்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட 23 இந்திய மீனவர்களும் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

## வாகன விபத்தில் தம்பதி உயிரிழப்பு

தலாத்துஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தென்னகும்புர – ராகல வீதியின் ஹராகம பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தென்னகும்புரவில் இருந்து ராகலை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வீதியின் வலப்பக்கத்துக்குத் திரும்பியபோது வானுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

## மகாவலி ஆற்றில் மூழ்கி 59 வயதுடைய நபர் மாயம்

மகாவலி ஆற்றில் நீராடிய நால்வரில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை பேராதனை ஹிந்தகல பிரதேச மகாவலி ஆற்றில் நீராடியபோதே இவர் காணாமல்போயுள்ளார்.

பேராதனை பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே காணமல்போயுள்ளார்.

இவரைத் தேடும் பணியில் பொலிஸாரும் கடற்படையின் உயிர்காப்புப் படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**போர்க்களமானது கிளிநொச்சி...**

ஏ – 9 வீதியில், இரணைமடுவுக்கு அண்மையாகப் போர்க்களம் போல் காட்சியளித்தது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

இரணைமடு சந்தியில் இருந்து போராட்டம் ஆரம்பித்து, கிளிநொச்சி நகரை நோக்கி நகர்ந்த போது, பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் வீதியின் குறுக்கே தடுப்பு அமைத்து, பேரணியைத் தடுத்தனர்.

இந்தப் பேரணியில் பங்கேற்க 5 பேருக்கு நீதிமன்றம் தடை பிறப்பித்திருந்த நிலையில், பொலிஸார் பேரணியை நகர அனுமதிக்கவில்லை.

பேரணியின் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதுடன், தடியடியும் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் தரதரவென வீதியில் இழுத்துச் செல்லப்பட்டனர்.

மாணவர்களைக் காப்பாற்றுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் முயன்றனர். பொலிஸாரால் இழுத்துச் செல்லப்பட்ட மாணவன் ஒருவரைக் காப்பாற்ற சிறீதரன் எம்.பி., அவரின் மேல் கவசம் போல் படுத்து காப்பாற்ற முயன்றார். பொலிஸார் அந்த மாணவனை இழுத்து எடுக்க முயன்றனர்.

இந்த இழுபறியின்போது பொலிஸார் தன்னைத் தாக்கினர் என்று சிறீதரன் எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

பொலிஸாரால் 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 5 மாணவர்களின் விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. கவிதரன், மிதுசன், எழில்ராஜ், அபிசேக், நிவாசன் ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி ஏ – 9 வீதியின் ஒரு பகுதியை மறித்து போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நீண்ட இழுபறியின் பின் மாணவர்களின் விடுதலை தொடர்பான பேச்சுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இருவர், ஆசிரியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் சென்றனர். அவர்கள் அங்கு நடத்திய பேச்சின் பின்னர் கைதான 5 மாணவர்களும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதன்பின்னர் போராட்டமும் நிறைவுக்கு வந்தது.

# யாழில் சுதந்திர தின நிகழ்வு






**(எஸ்.நிதர்ஷன்)**

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வு இன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாணவர்களின் பாண்ட் வாத்தியம் மற்றும் அணிவகுப்பு இடம்பெற்றன.

தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபால சுந்தரத்தால் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

இதன்போது மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட செயலாளரால் நெல்லி மரக்கன்றும் நடப்பட்டது.

நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் 52 ஆவது படைப்பிரிவின் உப கட்டளை தளபதி, பொலிஸார், மத குருமார், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் சுதந்திர தின நிகழ்வு







**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கை ஜனநாயகக் சோசலிசக் குடியரசின் 76 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரச அதிபர் த.உமாமகேஸ்வரனின் தலைமையில் இன்று நடைபெற்றது.

கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தேசியக் கொடி ஏற்றி நிகழ்வுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

மாவட்ட செயலகம் மற்றும் இராணுவத்தினர் இணைந்து ஏற்பாடு செய்த மரம் நடுகை நிகழ்விலும் இராஜாங்க அமைச்சர் கலந்துகொண்டார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பலாலியைப் பயன்படுத்துங்கள்!

இலங்கையில் மூன்று விமான நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பை இந்திய நிறுவனம் ஒன்று ஏற்க இருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இதற்கான அனுமதியை பெறுவதற்குரிய முயற்சியில் அந்த நிறுவனம் ஈடுபட்டிருக்கின்றமையை இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெனான்டோ உறுதிப்படுத்தி இருக்கிறார்.

அரசாங்கத்தின் முயற்சியினால் நாட்டுக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதாக அமைச்சர் கூறுகின்றார்.

இலங்கை இந்த வருடத்தில் - 2024 இல் - மொத்தம் 22 லட்சம் உல்லாசப் பயணிகளை எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

பெருமளவில் குவியும் உல்லாசப் பயணிகளை அவர்கள் முகம் கோணாத விதத்தில் கையாள்வதற்கு சரியான உபசரணை நடவடிக்கைகள் முக்கியம். அதற்கான திறன் கொண்டவையாக விமான நிலையங்கள் அமைவது பிரதானமானது என்றும் அவர் சுட்டுகின்றார்.

உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைக் கையாள்வதற்கான திறன் மேம்பாடு அவசியமாகின்றது. ஓர் இந்திய நிறுவனம் மூன்று விமான நிலையங்களை நிர்வகிக்க போகின்றது. அது நடந்தால், நமது விமான நிலையங்கள் நல்ல தரத்தை அடையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பு, கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், இரத்மலானை மற்றும் மத்தள விமான நிலையங்கள் ஆகிய மூன்றையுமே சர்வதேசப் போக்குவரத்துக்கான மையங்களாக்கி, அவற்றை இந்திய நிறுவனம் மூலம் கையாள - நிர்வகிக்க - திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

'உலகின் வெறுமையான (காலியான) விமான நிலையம்' என்று வர்ணிக்கப்படுவது மத்தள விமான நிலையம்தான். பயனற்ற அந்த விமான நிலையத்துக்காகப் பெருந்தொகைப் பணத்தை அள்ளிக் கொட்டிய இலங்கை அரசு, அதற்காகப் பெற்ற கடனையும் வட்டியையும் திரும்பச் செலுத்த முடியாது தடுமாறுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை அது வெள்ளை யானை. பயணிகள் இன்றி ஈயோட்டும் அந்த விமான நிலையத்தை நிர்வகிக்கவும் இந்தியாவிலிருந்து நிறுவனம் ஒன்றை தருவிக்கும் நிலைமை ஏளனத்திற்குரியது. அப்படிச் செய்தாலாவது அந்த விமான நிலையத்துக்கு விமானங்களும் பயணிகளும் வந்து செல்லும் நிலைமை வராதா என்று ஆதங்கத்தில் இந்த முயற்சி எடுக்கப்பட்டிருக்க கூடும்.

ஆயினும், மறுபுறத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் நெருக்கடியும் புரிந்து கொள்ளத் தக்கதே. அங்கு இப்போதைய நிலையில் தினசரி வந்து குவியும் பல்லாயிரம் உல்லாசப் பயணிகளின் குடிவரவுப் பணிகளை கையாள முடியாது விமான நிலைய நிர்வாகம் தடுமாறி விழி பிதுங்கி நிற்பது உண்மைதான்.

அதேசமயம் பெரும் எண்ணிக்கையில் வரும் இந்திய உல்லாச பயணிகளின் குடிவரவு விடயங்களை சமாளிப்பதற்காக அந்த விமானங்களை இரத்மலானைக்குக் திருப்புவது குறித்து ஆராயப்படுவதாக அமைச்சர் ஹரீம் கூறுகின்றார்.

''பெரும்பாலான இந்தியர்கள் வெள்ளத்தை மற்றும் கொழும்புக்கே பயணம் செய்கின்றார்கள். இரத்மலானை விமான நிலையம் அவர்களுக்கு எளிதானது. நாடாளுமன்றத்திற்கு மேல் பறக்காமல் கடலைச் சுற்றி வட்டமிட்டு வந்து நேரடியாக இரத்மலானையில் இறங்க முடியும்'' - என்கிறார் அமைச்சர் ஹரின்.

எனினும், பெரிய விமானங்கள் இரத்மலானையில் தரையிறங்குவதில் சிக்கல் இருப்பதாக அவர் கூறுகின்றார்.

உண்மைதான். உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்தால் தனித்து கட்டுநாயக்கா விமான நிலையத்தினால் தேவையை முழுமையாக நிறைவு செய்ய முடியாது என்பதும் மாற்று வழிகளைத் தேட வேண்டும் என்பதும் நியாயமானவைதான்.

ஆனால், கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு அதற்காக ஊர் முழுவதும் அலைவது போல கொழும்பு ஆட்சி பீடம் நடப்பதுதான் விசனத்துக்கும் ஆச்சரியத்திற்கும் உரியது.

இந்தியாவுக்குப் பக்கத்தில் பலாலி விமான நிலையம் உள்ளது. சர்வதேச விமானங்கள் பலாலியில் இறங்கக் கூடியவனாக அந்த விமான நிலையத்தை மாற்றி அமைத்தால் வெளிநாட்டில் வதியும் வடக்கு, கிழக்கின் புலம்பெயர்ந்தோர் பெரும் எண்ணிக்கையில் அதனை நேரடியாக பயன்படுத்துவர். கட்டுநாயக்கா விமான நிலையத்தின் நெருக்கடியும் குறையும்.

ஒரு பயணிக்கு ஆக இருபது கிலோ எடை பொதிகளை மட்டும் அனுமதிக்கும் சிறிய ரக விமானங்களே பலாலிக்கு விமான சேவையை நடத்தும் போது தூர தேசங்களில் இருந்து வரும் புலம்பெயர்ந்தோர் அந்த மார்க்கத்தைப் பயன்படுத்த மாட்டார்கள் என்பது உறுதி.

பலாலி விமான நிலையம் மேம்பட்டால், வடக்கு மேம்பட்டு விடும் என்ற கருத்தில் அதை முடக்கி வைத்திருப்பதற்குக் கொழும்பு தீர்மானித்திருப்பதால், தேவை - அவசியம் - கட்டாயம் - இருந்தும் அந்த விமான நிலையம் மேம்படுத்தப்படாமல் முடக்கப்பட்டு இருக்கின்றது.




# வவுனியா நகர் முழுவதும் தேசியக் கொடிகள்

(வசந்தன்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுதந்திர தினத்தை இன்று கரிநாளாக அனுஷ்டித்து வருகின்ற நிலையில் வவுனியா நகர் முழுவதும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

வவுனியா ஏ – 9 வீதியின் இரு பகுதிகளிலும் மணிக்கூட்டுக் கோபுர சந்தி, வைத்தியசாலை சுற்றுவட்டம், பண்டார வன்னியன் சதுக்கம் ஆகிய பகுதிகளில் இலங்கையின் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

சுதந்திர தினத்தைக் கரிநாளாக அனுஷ்டித்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டிலும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டிலும் சுதந்திர தினமான இன்று வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் இவ்வாறு கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.



# காரைநகர் இந்துக் கல்லூரிக்கு இரண்டு புதிய வகுப்பறைகள்

## திறப்பு விழா நிகழ்வுகள் நாளை

காரைநகர் இந்துக் கல்லூரிக்கு இரண்டு புதிய வகுப்பறைகள் கட்டி வழங்குகின்றனர் 1973 பொன்னகவை அணியினர்.

கடந்த பத்து ஆண்டுகளில் எட்டு வகுப்பறைகளை இழந்துள்ள காரைநகர் இந்துவுக்கு புதிதாக இரண்டு வகுப்பறைகளை 1973 இல் பிறந்து 1989 இல் க.பொ.த சாதாரண பரீட்சை எழுதிய 50 வயதை பூர்த்தி செய்த பழைய மாணவர்கள் அமைத்து வழங்கியுள்ளனர்.

சயம்பு மண்டபத்தில் அமைந்துள்ள ஐந்து வகுப்பறைகள் மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. மூன்று வகுப்பறைகளில் காரைநகர் கல்விக் கோட்ட பணிமனை இயங்கி வருகிறது.

அரசால் பௌதீக வளங்கலுக்கு மேலதிக நிதி செலவிட முடியாத இந்த சூழ்நிலையில் 1973 பொன்னகவை மாணவர்கள் உரிய நேரத்தில் இரண்டு புதிய வகுப்பறைகளை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

மிகக் குறைந்த காலமாகிய ஐந்து மாதங்களில் முழுமையாக நிறைவு செய்து 70 லட்சம் ரூபா செலவில் பூர்த்தி செய்துள்ளனர்.

இதன் கோலாகல திறப்புவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அ. ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள் இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ம. பற்றிக்டிறஞ்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ், வடக்கு மாகாண மேனாள் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், வடக்கு மாகாணக் காணி ஆணையாளர் அ. சோதிநாதன், யாழ். மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.



# வட மாகாண ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள்

(வாஸ் கூஞ்ஞ)

ஊடகத்துறை அமைச்சால் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான பல்வேறு விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊடகத்துறை அமைச்சால் இரண்டு நாள்கள் வேலைத் திட்டங்களாக இது செயற்படுத்தப்பட்டுள்ளது.

இதில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் 50 பேர் கலந்துகொண்டனர்.

இதில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் மற்றும் ஊடகவியலாளர்கள் செய்திகள் சேகரிக்கச் செல்லும்போது அடையாளப்படுத்தும் குறுஞ்சட்டை என்பனவும் வழங்கப்பட்டன.



# நிலக்கடலை விழிப்புணர்வு நிகழ்வு தும்பங்கேணியில்

(வி.ரி.சகாதேவராஜா)

ஊடுபயிர்ச் செய்கை மூலம் நிலக்கடலை விதை உற்பத்தி தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வு திக்கோடை விவசாய போதனாசிரியர் பிரிவுக்கு உட்பட்ட தும்பங்கேணி இளைஞர் விவசாய திட்டப் பிரதேசத்தில் நடைபெற்றது.

திக்கோடை விவசாய போதனாசிரியர் எஸ்.சசிகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் உதவி விவசாய பணிப்பாளர்களான எஸ்.சித்திரவேல், திருமதி நித்தியா நவரூபன், தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், போரதீவுப்பற்று அக்றோ பரடைஸ் கம்பனியின் தவிசாளர், ஆலய பரிபாலன சபையினர், கிராம அபிவி ருத்தி சங்கத்தினர் மற்றும் பிரதேச விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஊடு பயிர்ச்செய்கைக்கான விதைகள் வழங்குவது தொடர்பாகவும் தற்போதைய விவசாய திட்டங்கள் தொடர்பிலும் தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வாழைச் செய்கையில் ஊடுபயிராகச் செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலையின் அறுவடை நிகழ்வும் நடைபெற்றது.

இதன்போது விவசாயிகள் குறைகள் மற்றும் தேவைகள் கேட்டறியப்பட்டன. அவற்றுக்கான தீர்வுகள் விரைவாக பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் பிரதி விவசாய பணிப்பாளர் உறுதியளித்தார்.




# சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒன்றிணைந்த சிரமதானப் பணி

(அபு அலா)

சுதந்திர தினத்தை முன்னிட்டு கிளீன் ஸ்ரீ லங்கா, அறுகம்பை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் ஒன்றிணைந்து சிரமதானப் பணியை நேற்றுக் காலை (03) பொத்துவில் பிரதேசத்தில் முன்னெடுத்தன.

சுதந்திர தின நிகழ்வு அறுகம்பை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தால் பொத்துவில் அறுகம்பை பொது மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்தே இந்தச் சிரமதானப் பணியை முன்னெடுத்தது.

இந்தப் பணியில் ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவரும் கிளீன் ஸ்ரீ லங்காவின் தலைவருமான ஏ.முஸம்மில் மற்றும் அதன் செயலாளர் எச்.எம்.இமாம் மற்றும் அதன் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# சுதந்திர தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருதில் சிரமதானம்

(எம்.எம்.றம்ஸீன்)

இலங்கையின் சுதந்திர தின சிரமதான நிகழ்வானது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பணிப்புரைக்கு அமைவாக நிர்வாக கிராம உத்தியோகஸ்தர்கள் எம்.எஸ்.எம். நளிரின் ஒழுங்குபடுத்தலிலும், கல்முனை மாநகர சபையின் மேற்பார்வையாளர் யூ.கே. காலித்தீனின் மேற்பார்வையிலும் இடம்பெற்றது.

இந்தச் சிரமதானத்தில் பிரதேச செயலகத்தின் கிராம சேவை உத்தியோகஸ்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் ஆகியோருடன் கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் ஊழியர்களும் சமூர்த்தி பயனாளிகளும் கலந்து கொண்டனர்.




# கல்முனை மாநகர சபையால் வீதிகளுக்குப் பெயர்ப் பலகை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளுக்கு பெயர்ப் பலகைகளை நிறுவும் வேலைத் திட்டம் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸியின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.அமீர், அமானா வங்கியின் கல்முனை நகரக் கிளை முகாமையாளர் எம்.ரி. நயீமுல்லாஹ், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சிபான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தனியார் பங்களிப்புடனான நகர அழகுபடுத்தல் திட்டத்தின் ஓர் அங்கமாக முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்துக்கு அமானா வங்கி அனுசரணை வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர சபையின் கீழுள்ள 150 வீதிகளுள் முதற்கட்டமாக 40 வீதிகளுக்குத் தற்போது பெயர்ப் பலகைகள் நிறுவப்படுகின்றன.

கல்முனை மாநகர பிரதேசங்களில் பெரும்பாலான வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள் இல்லாமையால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி மேற்கொண்ட முயற்சியின் பயனாக இவ்வீதிகளுக்கு பெயர்ப் பலகையிடும் வேலைத் திட்டத்துக்கு அமானா வங்கி அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.





# உலக ஈரநில தினத்தை முன்னிட்டு காத்தான்குடி கடற்கரையில் சிரமதானம்

(எம்.எம்.றம்ஸீன்)

உலக ஈரநில தினம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் காத்தான்குடி கடற்கரைப் பிரதேசத்தில் ஊறுவிளைவிக்கும் பொருள்களை அகற்றும் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வு பிரதேச சுற்றாடல் அதிகாரி திருமதி பாஸ்கரன், கரையோர பாதுகாப்பு மற்றும் வளங்கள், முகாமைத்துவ திணைக்க அதிகாரி ஆகியோரது ஏற்பாட்டில் கோ கிறீன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நிறுவன உறுப்பினர்கள், காத்தான்குடி மீராபாலிகா தேசிய பாடசாலை, அல் ஹிறா மகா வித்தியாலயம், காத்தான்குடி மத்திய கல்லூரி, மாவிலங்கந்துறை விக்னேஷ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் சுற்றாடல் படையணியினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது பெருமளவு உக்கக்கூடிய, உக்க முடியாத கழிவுகள் சேரிக்கப்பட்டன. இதற்காக காத்தான்குடி நகர சபை பொலித்தின் பைகளையும், கையுறைகளையும் வழங்கியிருந்தது.



# மட்டக்களப்பு ஏறாவூரில் புதிய பாடசாலை ஆரம்பம்

(எம்.எம்.றம்ஸீன்)

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஏறாவூர் கல்விக் கோட்டத்தின் மீராகேணி சகாத் கிராமத்தில் யூ.எல் தாவூத் வித்தியாலயம் எனும் பெயரில் புதிய ஆரம்பப் பாடசாலை கடந்த வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மீராகேணி சகாத் கிராமம் பாடசாலை வளாகத்தில் மீராகேணி றெட்சிப் அமைப்பின் தலைவரும் மட்டக்களப்பு மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளருமான எம்.ஆர் சியாஹுல் ஹக் தலைமையில் இந்த வைபவம் இடம் பெற்றது.

பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவருமான கௌரவ செய்யத் அலிஸாஹிர் மௌலானாவும், கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம் அமீரும், விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் எம்.எஸ்.பஸீர், மட்டக்களப்பு மத்தி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எச்.எம் றமீஸ், ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர் எம்.எஸ்.நளீம், ஏறாவூர் நகர சபையின் விசேட ஆணையாளர் எம்.எச்.எம் ஹமீம், ஏறாவூர் பற்று பிரதேச சபையின் செயலாளர் வீ.பற்குணன், ஏறாவூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ லத்தீப், பாடசாலையின் அதிபர் திருமதி பர்ஹான் உட்பட பாடசாலை அதிபர்கள், தாவூத் அதிபர் குடும்பத்தினர், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், சமூகமட்ட நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

வருகை தந்த அதிதிகளால் பாடசாலையின் பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்யப்பட்டது. பாடசாலையும் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அத்தோடு மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள மருதமுனை – பெரியநீலாவணை அக்பர் வித்தியாலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் எம்.சி.எம்.மபாஸ் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாடசாலையில் உள்ள குறைநிறைகளை ஆராய்ந்தார்.

பாடசாலை நிர்வாகத்திடமும், மாணவர்களிடமும் கல்வி மேம்பாட்டு விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினரின் பொதுஜன தொடர்பாடல் செயலாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# ஏறாவூர்பதியுதீன் மஹ்மூத் வித்தியாலய 10 ஆம் ஆண்டு நிறைவும் கௌரவிப்பும்

(உமர் அறபாத் -ஏறாவூர் )

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஏறாவூர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயத்தின் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட 10 ஆண்டு நிறைவும் மாணவர்கள் கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றன.

2023ம் ஆண்டு மெய்வல்லுனர் போட்டியில் வெற்றிகளை பெற்ற மாணவர்கள், 2023 ஆண்டு 5 ஆம் தர புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பிரதேச கலாச்சார போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர்.ஆஆ ஜலால்தீன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக பாடசாலை ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் பசீர் சேகுதாவூத் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிமனையின் பணிப்பாளர் எம்.எஸ். அமீர் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் மற்றும் மாணவர்களின் வெற்றிகளுக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களும் இதன்போது பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பெற்றோர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

பாடாசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்வை அலங்கரித்தன.








# தென் எருவில்பற்று பிரதேச செயலக பொங்கல்!

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் துறைநீலாவணை கிராம பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளுடன் இணைந்து ஏற்பாடு செய்து நடத்திய பிரதேச பொங்கல் விழா பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் இடம்பெற்றது.

துறைநீலாவணை தில்லையம்பல பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று, ஆலயத்துக்கு அருகாமையில் கதிரறுவடை நடைபெற்றது. நெற்கதிர்கள் பிரதேச செயலக பிரிவின் அறநெறி பாடசாலை மாணவர்கள், கலைக் கழகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் உள்ளடங்கலாக பண்பாட்டு பவனியாக துறைநீலாவணை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு கொண்டுவரப்பட்டது.

கலாசார விழுமியங்களுடன் பண்பாட்டு பவனியாக கொண்டுவரப்பட்ட நெற்கதிர்கள் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்ததும் சமய வழிபாடுகளுடன் பாரம்பரிய முறையில் உப்பட்டி அடித்து தூற்றப்பட்டு பின்னர் நெல் குற்றப்பட்டு பொங்கல் பானையில் புத்தரிசியிடப்பட்டு நிகழ்வுகள் இனிதே ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மங்கல விளக்கேற்றல் நிகழ்வுகளைத் தொடர்ந்து எமது பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அறநெறி பாடசாலை மாணவர்கள், கலைக்கழகங்கள், பாடசாலை மாணவர்கள், பிரதேச கலைஞர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் கிராமிய நடனங்கள், பாடல்கள், கவிதைகள் மற்றும் நாடகங்கள் என்பன இடம்பெற்றன.

அறநெறிப் பாடசாலை மாணவர்கள், கலைக்கழகங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கிடையிலான கோலம் போடுதல், பூ மாலை கட்டுதல் மற்றும் கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல் போன்ற விளையாட்டுகளும் இடம்பெற்றன.

அத்துடன் துறைநீலாவணை யுனைட் விளையாட்டு கழக நிர்வாகத்தினரால் பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். கண்ணகை அம்மன் ஆலய நிர்வாக்கத்தினரால் அம்மன் புகழ் பாடும் இறுவட்டு ஒன்றும் வெளியீட்டு வைக்கப்பட்டது.











# இலங்கை கடற்படை 23 தமிழக மீனவர்களை கைது செய்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

## ராமதாஸ் கண்டனம்

“சிங்களக் கடற்படை மேலும் 23 மீனவர்களை கைது செய்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களை பறிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்களை சிங்களப்படை தொடர்ந்து கைது செய்து வருகிறது. இதற்கு மத்திய அரசு முடிவு கட்ட வேண்டும்.”

– இவ்வாறு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 23 பேரை கச்சதீவு அருகே சிங்களக் கடற்படையினர் கைது செய்திருக்கின்றனர். அவர்களின் இரு மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கச்சதீவை அணமித்த இந்திய கடல் எல்லையில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது சிங்களக் கடற்படையினர் அத்துமீறி நுழைந்து கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

கடந்த மாதத்தில் மட்டும் 40 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களில் பலர் ஏற்கெனவே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் 18 மீனவர்கள் மூன்று நாள்களுக்கு முன்னர் தான் விடுதலை செய்யப்பட்டனர். அதற்குள் ளாகவே மேலும் 23 மீனவர்களை சிங்களக் கடற்படையினர் கைது செய்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களை பறிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்களை சிங்களப்படை தொடர்ந்து கைது செய்து வருகிறது. இதற்கு மத்திய அரசு முடிவு கட்ட வேண்டும்.

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான கடற்பரப்பு மிகவும் குறுகியது. அதனால் தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள்ளும் நுழைவதை தவிர்க்க முடியாது. அதனால் தமிழக மீனவர்களும், இந்திய மீனவர்களும் காலம் காலமாக எந்தெந்த பகுதிகளில் மீன் பிடித்து வந்தார்களோ, அதே பகுதியில் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதிப்பது தான் சரியானதாகும்.

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் விவகாரத்துக்கு தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக தமிழக மீனவர்கள், இலங்கை மீனவர்கள், தமிழக அரசு, இலங்கை அரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுக்களுக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# வாழ்த்து கூறிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார் நடிகர் விஜய்

தனது அரசியல் வருகைக்கு வாழ்த்து தெரிவித்தவர்களுக்கு நடிகர் விஜய் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

‘தமிழக வெற்றி கழகம்’ என்ற பெயரில் நடிகர் விஜய் கடந்த வெள்ளிக்கிழமை புதிய கட்சி தொடங்கியுள்ளார்.

எனினும், 2024 மக்களவைத் தேர்தலில் போட்டியிடவில்லை. இத்தேர்தலில் எந்த கட்சிக்கும் ஆதரவு இல்லை என்று விஜய் தெரிவித்தார்.

2026 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதுதான் இலக்கு என்று அவர் அறிவித்துள்ளார்.

பல அரசியல் கட்சி தலைவர்களும்,



பிரபலங்களும் இது குறித்து கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், தனக்கு வாழ்த்து தெரிவித்தவர்களுக்கு நடிகர் விஜய் நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை,

“தமிழ்நாட்டு மக்களின் பேரன்போடு நான் முன்னெடுத்துள்ள அரசியல் பயணத்திற்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித்த பெருமதிப்புக்குரிய பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், அன்புக்குரிய திரைத்துறை நண்பர்கள், பாசத்துக்குரிய தமிழக தாய்மார்கள், சகோதர, சகோதரிகள், ஊக்கமளிக்கும் ஊடகவியலாளர்கள், ‘என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்கள்’ அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளுடன் பணிவான வணக்கங்கள். அன்புடன், விஜய்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.




# மக்கள் நல திட்டங்களை செய்யுங்கள் நடிகர் விஜய்க்கு அன்புமணி அறிவுரை

மக்கள் நல திட்டங்களை செய்யுங்கள் என்று நடிகர் விஜய்க்கு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட தொகுதிகளில் பா.ம.க. வாக்குச்சாவடி களப்பணியாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடந்தது. இதில் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

இதன்போது அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழகத்தில் மருத்துவர், நடிகர் என யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம். யார் கட்சி தொடங்கினாலும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை செய்ய வேண்டும். புதிய கட்சி தொடங்கிய நடிகர் விஜய்க்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல, நடிகர் விஜய் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை கொண்டு வர வேண்டும்." – என்றார்.

# நாம் தமிழர் கட்சியினர் தேச விரோத செயல்களில் ஈடுபட்டனர் என்பதை என்.ஐ.ஏ. சோதனை காட்டுகிறது

## மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கருத்து

தேசத்துக்கு எதிரான செயல்களில் நாம் தமிழர் கட்சியினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை என்.ஐ.ஏ. சோதனை காட்டுகிறது என்று மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் நாம் தமிழர் கட்சியினர் வீடுகளில் என்.ஐ.ஏ. சோதனை நடத்தியிருப்பது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர்,

"இது மிகப்பெரிய கவலைக்குரிய விசயம். அதாவது தேசத்துக்கு எதிரான ஒற்றுமை அல்லது தேசத்துக்கு எதிரான செயல்களில் நாம் தமிழர் கட்சியினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த சோதனை காட்டுகிறது.

தமிழக பொலிஸார் கூட அவர்கள் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ) தொடர்ந்து நாம் தமிழர் கட்சியினரின் நடவடிக்கை மற்றும் செயல்பாடுகளைத் தொடர்ந்து உன்னிப்பாக கவனித்தபிறகு, அவர்கள் நாட்டுக்கு எதிரான செயல்களை செய்ததை உறுதிப்படுத்திய பிறகு, என்.ஐ.ஏ. அவர்களது வீடுகளில் சோதனை நடத்தியுள்ளனர். அவர்களை கைது செய்ய உள்ளனர். அந்தவகையில், என்.ஐ.ஏ. அமைப்பு அவர்களது வேலையை சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள்.



தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களிடம் சென்று கேள்வி கேட்கும்போது, அவர்கள் தங்களை மிரட்டுகின்றனர், தங்களை காப்பாற்றுங்கள் எனக்கூறும் அலறல் சத்தத்தை நாம் கேட்டிருப்போம். அப்படியான அலறலைத்தான் தவறு செய்தவர்கள் இந்த விவகாரத்தில் செய்து கொண்டுள்ளனர்." – என்றார்.

# ஹவுதி கிளர்ச்சியாளர்களின் 36 இலக்குகள் மீது தாக்குதல்!





அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து யேமனில் 13 இடங்களில் உள்ள 36 ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளன.

அமெரிக்காவின் இராணுவத் தளத்தின் மீதான ஆளில்லா விமானத் தாக்குதலுக்குப் பதிலடியாக அமெரிக்காவினால் நேற்று முன்தினம் சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள 85 இலக்குகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை 3 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டமைக்கு எதிராகவே இந்த தாக்குதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என வெள்ளை மாளிகை குறிப்பிட்டிருந்தது.

அமெரிக்காவின் பதிலடித் தாக்குதல்கள் பேரழிவு தரும் விளைவுகளை ஏற் படுத்தும் எனவும் அமெரிக்கா தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் 16 பொதுமக்களும் அடங்குவதாக ஈராக் அறிவித்துள்ளது.

ஈரானின் ஆதரவு குழுக்களை குறிவைத்து நேற்று முன்தினம் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிகளின் விதிகளை மீறி திருமணம்: இம்ரான், மனைவிக்கு சிறை தண்டனை



முஸ்லிம் விதிகளை மீறி திருமணம் செய்த குற்றத்துக்காக இம்ரான் கானின் மனைவிக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கடந்த 2018 ஆம் ஆண்டில் புஷ்ரா பீவி என்பவரை திருமணம் செய்தார். அவர்களின் திருமணத்தை எதிர்த்து புஷ்ரா பீவியின் முன்னாள் கணவர் கவார் பிரீத், ராவல் பிண்டி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

கடந்த 1989 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கவார் பிரீத்தும் புஷ்ரா பீவியும் கணவன், மனைவியாக வாழ்ந்தனர். கடந்த 2017 ஆம் ஆண்டில் இருவரும் பரஸ்பரம் விவாகரத்து செய்தனர்.

முஸ்லிம் திருமண விதிகளின்படி கணவரை இழந்த பெண் அல்லது கணவரை விவாகரத்து செய்த பெண் உடனடியாக மறுமணம் செய்யக்கூடாது. சம்பந்தப்பட்ட பெண் கர்ப்பமாக இருக்கிறாரா, இல்லையா என்பதை அறிய குறிப்பிட்ட காலம் காத்திருக்க வேண்டும். இது 'இத்கா காலம்' என்று அழைக்கப்படுகிறது.

இந்த காலம் நிறைவடைவதற்கு முன்பே புஷ்ரா பீவியை, இம்ரான் கான் திருமணம் செய்தார் என்ற குற்றம் சாட்டி முன்னாள் கணவர் கவார் பிரீத் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த ராவல் பிண்டி நீதிமன்றம், முஸ்லிம் திருமண விதிகளை மீறியதற்காக இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீவிக்கு தலா 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி குத்ரத் உல்லா தீர்ப்பளித்தார். இம்ரான் மீது ஊழல், மோசடி, கொலை மிரட்டல் என 150 இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில், 2 வழக்குகளில் நீதிமன்றம் ஏற்கெனவே சிறை தண்டனை விதிக் கப்பட்ட நிலையில் இம்ரான் கான் சிறையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

அமெரிக்காவின் ஒக்லஹோமா மகாணத்தில் 5.1 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த தகவலை ஐரோப்பிய-மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் வெளியிட்டுள்ளது.

ஒக்லஹோமா மாகாணத்தில் ப்ராக் நகருக்கு 8 கிலோ மீற்றர் வடமேற்கே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்தோடு, 3 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் அந்த ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் எந்த தகவல்களும் வெளியாகிவில்லை.



# சுதந்திர தின நிகழ்வுகள்



**(சம்மாந்துறை நிருபர்)**

சம்மாந்துறை தபால் நிலையத்தில், சுதந்திர தின விழா ஏ.யூசுப்லெப்பை தலைமையில் இன்று நடைபெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகச் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் கே.டி.எஸ்.ஜயலத் கலந்து கொண்டார். தபால் நிலைய நிர்வாக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொது மக்களும் கலந்து கொண்டனர்.




**(பழுவூரான்)**

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் மட்டக்களப்பு மண்முனை- வடக்குப் பிரதேச செயலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (04) கொண்டாடப்பட்டது.

மண்முனை- வடக்குப் பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர்களான கே. டபிள்யூ. சியாகுல்ஹக் மற்றும் லெட்சணியா பிரசாந்தன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களான திருமதி ச.பிரணவசோதி மற்றும் திருமதி ஜீ.கணேசமூர்த்தி, நிர்வாக உத்தியோகத்தர் ரி.சந்திர மோகன், நிர்வாக கிராம உத்தியோகத்தர் ரி.ராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தேசியக் கொடியை ஏற்ற, பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

# சுதந்திர தின நிகழ்வுகள்




**(எம்.ஏ.ஏ.அக்தார்)**

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வு சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்றப் வித்தியாலய அதிபர் எம் .ஐ. சம்சுதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யு.எஸ்.எப். ஸ்ரீ லங்கா சமூக சேவை அமைப்பினரும் இணைந்து மாபெரும் சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.எம்.றவூப் அதிதியாக கலந்து கொண்டார். மற்றும் பிரதி அதிபர் எஸ் .எம் சுஜான், ஆசிரியர்கள்,

---





**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டி முதலைப்பாளி தாருல் உலூம் காஷிபுல் ஹுதா அரபுக் கல்லூரியில் அதன் அதிபர் அஷ்ஷேஹ் ஏ. டப்யூ ஜெமில்கான் தலைமையில் இன்று சுதந்திர தின கொண்டாட்டம் இடம்பெற்றது.

# சுதந்திர தின நிகழ்வுகள்



**(சம்மாந்துறை நிருபர்)**

சம்மாந்துறை அறபா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.எச். ஹிமாயா தலைமையில் சுதந்திர தின நிகழ்வுகள் இன்று (4) நடைபெற்றன. இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் கீழ் மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வுக்கு பாடசாலை ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.







**(பாறுக் ஷிஹான்)**

இலங்கையின் சுதந்திர விழா நிகழ்வு அம்பாறை நகரத்தில் அம்பாறை ஏரிக்கரைக்கு முன்பாக இன்று (04) அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வு அணி வகுப்புடன் ஆளுநரின் தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமானது. போர் வீரர்களை நினைவு கூர்ந்த பின்னர், மரியாதை அணிவகுப்பு மட்டுமின்றி, சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பேர்கர் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேலதிக மாவட்ட செயலாளர் வி.ஜெகதீசன், மேலதிக மாவட்ட செயலாளர் நிலந்த டி சொய்சா, பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த ஸ்ரீபத்ம, தலைமையாசிரியர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள், பாதுகாப்பு பிரிவின் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சுதந்திர தின நிகழ்வுகள்



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 76 ஆவது சுதந்திர தினம் நேற்று (04) ஞாயிற்றுக்கிழமை சாய்ந்த மருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் கொண்டாடப்பட்டது.

மழைக்கு மத்தியில் மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் மரைக்காயர்மார்கள் புடைசூழ தேசிய கொடி ஏற்றப்பட்டது.

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சுதந்திர தினத்தை முன்னிட்டுப் பள்ளிவாசல் வளாகத்தில் மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

பள்ளிவாசலின் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.எம். சம்சுதீன், சாய்ந்தமருது பிரதேச செயலக முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஹான், ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூர், பொருளாளர் ஏ.ஏ.சலீம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

---




**(சம்மாந்துறை நிருபர்)**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 76 ஆவது சுதந்திர தின விழா சம்மாந்துறை ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் ரமீஸ் ஹாபிஸ் தலைமையில் இன்று (4) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மர நடுகையும் இடம்பெற்றது.

நிகழ்வில் ஜனாஸா நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# சுதந்திர தின நிகழ்வுகள்



**(நூருல் ஹுதா உமர்)**

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சுதந்திர தின நிகழ்வும் மரநடுகையும் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் தலைமையில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல். மஜீத், சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல், பல்கலைக்கழக வேலை பகுதியின் பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸில்,பிரதம பாதுகாப்பு அதிகாரி ஏ.எம்.ஜாபிர், விரிவுரையாளர்கள், நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






**( யூ.கே. காலித்தீன்)**

சுதந்திர தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது அல் அமானியா மீனவர் கூட்டுறவுச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு தலைவர் வை. எல். காலிதீன் தலைமையில் சங்க அலுவலகக் கட்டட முன்றலில் இடம் பெற்றது. பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்முனை கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் அலு வலகம் சார்பாக தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். பரீட் கொடியை ஏற்றிவைத்தார்.

இதன்போது அண்மையில் நாட்டில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட சங்கத்தின் 48 அங்கத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி கள் வழங்கப்பட்டன.